**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 87/2021 D.W .1**

Name: வள்ளி Husband's Name : பாண்டியன்
Village: Taluk :
Age : Occupation :
Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.08.2023

-----------------------------------------------------------------------------------------------------

**28.08.2023: முதல் விசாரணை:**

1) நான் கொத்தமங்களம், தெற்கு குடியிருப்பில் வசிக்கிறேன். நான் சித்தாள் வேலை பார்க்கிறேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. புகார்தாரரைத் தெரியாது. பள்ளத்தூர், சோலைமுருகன் என்பவரிடம் ரூ.30 ஆயிரம் கடன் வாங்கியிருந்தேன். அதில் ரூ.20 ஆயிரத்தைத் திருப்பி செலுத்திவிட்டேன். கொரோனா காலக்கட்டத்தில் ரூ.10 ஆயிரத்தைத் திருப்பி செலுத்த முடியவில்லை. 10 ஆயிரத்தைக் கேட்டு பிரச்சனை செய்தார்கள். அந்த 10 ஆயிரத்தைச் செலுத்தியபிறகு அவரிடம் கொடுத்திருந்த காசோலையைத் திருப்பி கேட்டபோது, தேடி எடுத்து தருவதாக சொன்னார். அவரிடம் கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் மூலமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத்திற்கு ஆஜரான பிறகு தான் எனக்கு விவரம் தெரியும். சோலைமுருகன் என்பவரை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன்.

**புகார்தாரர் தரப்பு கு.வி. வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.